களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# Threads of Tradition: Professions in Tamil Culture and Classical Literature

**Dr. P. Uma Shankari**

**Assistant Professor – Department of Tamil, Valliammal College for Women, Annanagar, Chennai – 600 102.**

**umasankari1989@gmail.com, Mob: 9941700592**

# செவ்விலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் தொழில்கள்

**முனைவர் உமா சங்கரி.பா**

**உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை, வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, அண்ணாநகர், சென்னை – 600 102.**

umasankari1989@gmail.com, Mob: **9941700592**

Abstract:

The purpose of this study is to compare and explain how the professions are in Tamil culture and how those professions are mentioned in the classical literature.

• In the preface it is explained that sevvilyakyas are the treasury of culture
• The definition of culture is explained and the diversity of people during the Sangam period is highlighted.
• Evolution of the industrial status of the people during the Sangam period is explained.
• How carpentry, butchery, pottery, etc. are mentioned in the scriptures have been analyzed.
• Salt industry, laundry industry etc. are also explained.
• In the conclusion, the findings of this article are compiled and the usefulness of the study is highlighted.
• Footnotes, bibliography are attached.

**Keywords**; Tamil Lierature, Culture, Sangam Period, Industries, Carpentry, Weaving

**ஆய்வு நோக்கம்**

செவ்விலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் தொழில்கள் ஏன்ற தலைப்பில் அமைந்த இந்த ஆய்வு தமிழர்களின் பண்பாட்டில் தொழில்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்றமையும், அந்த தொழில்கள் செவ்வியல் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையும் ஒப்பிட்டு விளக்குவதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

- முன்னுரையில் செவ்விலக்கியங்கள் பண்பாட்டின் கருவூலமாக இருக்கின்றமை விளக்கப்பட்டுள்ளது
- பண்பாடு என்பதன் வரையறை விளக்கப்பட்டு சங்க கால மக்களின் பன்பாடு எத்தகையது என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- சங்க கால மக்களின் தொழில் நிலையின் பரினாம வளர்ச்சி விளக்கப்பட்டுள்ளது.
- தச்சுத் தொழில்,கொல்லத் தொழில், மண்பாண்டத் தொழில் போன்றவை செவ்விலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பது ஆய்ந்து உரைக்கப்பட்டுள்ளது.
- உப்பளத் தொழில், சலவைத் தொழில் போன்றவையும் விளக்கப்பட்டுள்ளது.
- முடிவுரையில் இக்கட்டுரையின் வழி அறியலாகும் செய்திகள் தொகுக்கப்பெற்று ஆய்வின் பயன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- அடிக்குறிப்புகள், துணைநூற்பட்டியல் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

**முதன்மைச் சொற்கள்**

செவ்விலக்கியங்கள், பண்பாடு, சங்க காலம், தொழில்கள், தச்சுத் தொழில், நெசவுத் தொழில்

## முன்னுரை

செவ்விலக்கியங்கள் மக்களின் பண்பாட்டைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. மேலும் அவை இக்காலத்திலும் நாட்டுப்புற மக்களின் பண்பாட்டோடு ஒன்றிப்போவதையும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதையும் அறிய முடிகிறது. பண்பாடு என்பது ஒற்றைச் சொல்லல்ல. மக்களின் வாழ்வியல் முறைகளை விளக்கியுரைப்பதாகும். இருப்பிடம், உணவு, உடை, தொழில், நம்பிக்கை, விழாக்கள், வழிபாடுகள், மொழி போன்றவை பரந்து விரிந்த நாகரிகத்தின் வெளிப்பாடாகும். சங்க கால மக்களின் சாதி அமைப்புகள், உணவு முறைகள், நிலத்தையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன . இத்தகைய தொழில் அமைப்புகள் எவ்வாறாக சமூகத்தில் காணப்படுகின்றனவோ அவ்வாறாகவே சங்க இலக்கியப் பாடல்களிலும் பலவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு இரண்டற கலந்துள்ள தொழில் முறைகள் சங்க இலக்கியத்தில் உள்ளது உள்ளவாறே காணப்படுகின்றது. தொழில்கள் என்பது பண்பாடோடு பின்னிப் பிணைந்தவை ஆகும்.

## பண்பாடு

மனிதனால் குழுவாய் இயங்கும் சமுதாயம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான பண்பாட்டை கொண்டிருக்கிறது. அஃதாவது தங்களுக்கென்று பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவு, இருப்பிடம், தொழில், மொழி, கல்வி என்பவை ஆகும். இதனையே தற்காலத் தமிழக அகராதி "குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றை சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தம் கலாச்சாரம் எனவும் பிறரிடத்தில் அல்லது பலர் முன்னிலையில் ஒருவர் நடந்து கொள்ள வேண்டிய முறை எனவும் இரண்டு பொருள்களை குறிப்பிடுகின்றன"[1]. "பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாக சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை

முறைகளின் சேர்மம் ஆகும். இது அந்தந்த சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது"[2] என்று வரையறுக்கப்படுகிறது.

இத்தகைய பண்பாடு தமிழர்களிடையே பழங்காலம் தொட்டி சிறந்து வளர்ந்துள்ளது. இன்றைய மனித சமுதாய வாழ்க்கைக்கு முன்னோடிகளாய் திகழ்ந்தவர்கள் தமிழர்களே ஆவர். தமிழர்தம் பண்பாட்டினை அவர்களின் இலக்கியங்களிலும் அறிய முடிகின்றன. புறநானூற்று பாடல்கள் ஆன "யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம்.92) , "உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்" (புறம்.182) , "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"(கலி.16), "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"(நற்.355) என்று பண்பாடு குறித்து சங்க பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றது.

சங்கத்தமிழர்கள் அகப்பண்பாட்டையும் புறப்பண்பாட்டையும் வேறுபடுத்தி கண்டிலர். அயராது உழைத்து, அவ் உழைப்பில் பிறர் நலம் பேணுவதாய் வாழ்ந்தவர் அக வாழ்விலும் ஒருவரின் அன்பு பாராட்டுகையிலும் குறிப்பாலன்றி பேரையோ குலங்களையோ குறிப்பிடாமல் இருந்தனர். அப்பண்பாட்டை வரையறையாகவும் கொண்டிருந்தனர் அகவாழ்விலும் புற வாழ்விலும் இரண்டற கலந்த பண்பாடானது சங்க கால மக்களுக்கு மட்டுமின்றி நாட்டுபுற மக்களிடையேயும் தொழில் உணவு வழிபாடு நம்பிக்கைகள் போன்றவற்றின் வழி ஒன்றி போவதை அறிய முடிகின்றது.

## சங்க கால மக்களின் தொழில் நிலை

மனித இனத்தின் வளர்ச்சிக்காலம் காட்டுமிராண்டி நிலையிலிருந்தும் நாடோடி நிலையில் இருந்தும் மாறி இன்றைக்கு நாகரிகமான நிலையை எட்டி இருக்கின்றது. இந்நிலையை அடைவதற்கு பல்வேறு காலங்களையும், நாகரீக மாற்றத்தையும் கண்டுள்ளது. காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் சங்கீத குறிப்புகளையே மொழியாகவும் கொண்டு வாழ்ந்தான். அத்தகைய மனிதன் செய்தி பரிமாற்றத்திற்காக பண்பாட்டின் முதன்மையான மொழியை பயன்படுத்தினான். அவ்வாறே அவன் நீர் வளம் மிகுந்த இடங்களில்

நாகரிகங்களை தோற்றுவித்தான். அவ்வாறாக தோன்றியதே சிந்து சமவெளி நாகரிகம், மஞ்சள் ஆற்று நாகரிகம், ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்றவை ஆகும். நாகரிகங்களின் முதற்கட்ட வளர்ச்சியே குழுவாக வாழ்தல் இயங்குதல் ஆகும். “உணவு சேகரித்தலும், வேட்டையாடுதலும் முதலில் உலகெங்கும் நிலவிற்று ஆனால் அதை தொடர்ந்த மாறுதல்கள் அந்தந்த சூழ்நிலையை பொறுத்தது ஆயிற்று. சில இடங்களில் கால்நடை பொருளாதாரத்திற்கும், விவசாய பொருளாதாரத்திற்கும் மாறினர். இவற்றின் முன்னேற்றம் இனக்குழு முறைக்கு வழி செய்தன.”[3]

பண்டைய சமுதாய முறைமையில் தாய் வழி சமுதாயம் வழக்கில் இருந்தது. இக்காலத்தில் பெண்கள் மதிக்கப்பட்டனர். காடுகிழாள், கொற்றவை முதலான பெண் தெய்வங்கள் வழிபாட்டிற்கு உரியனவாயின. வேட்டை சமுதாயத்தின் பிற்கால வளர்ச்சி நிலையில் தந்தை வழி சமுதாயம் மறுமலர்ச்சி பெற்றது. ஆயினும் நிலை பெறவில்லை. விவசாய தொழில் நிலைத்த ஒன்றாக சமுதாயத்தில் நிகழ்ந்த போது தாய் வழி சமுதாய முறை முடிவுக்கு வந்தது. சங்க காலம் இனக்குழு வாழ்க்கை முடிந்து மக்கள் சமுதாயம் உருவான காலமாகும். இதனை சங்க இலக்கியங்களின் வழியாக தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இனக்குழு வாழ்க்கை முறைக்கு அடுத்த காலம் சங்க காலம் ஆதலின் அதன் எச்சங்கள் பலவற்றையும் சங்க இலக்கியங்களில் காணமுடியும். திணைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சங்க இலக்கியங்களில் காடுகளை அழித்து நாட்டை உருவாக்குதல், விளைநிலங்களை உருவாக்குதல், உழவுத் தொழில் செய்தல், வேட்டையாடுதல், கால்நடை வளர்ப்பு முதலான கூறுகள் காணப்படுகின்றன. இதனை இனக்குழு வாழ்க்கையின் எச்சம் என்றே கொள்ளலாம். சங்க இலக்கியங்களில் உணவு சேகரிக்கும் வாழ்க்கை நிலை, வேட்டையாடும் வாழ்க்கை நிலை, கால்நடை வளர்ப்பு நிலை, பயிர்த்தொழில் செய்யும் வாழ்க்கை நிலை, காடுகளை எரித்து பயிர் செய்யும் வாழ்க்கை நிலை ஆகியவை சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இன்றைய வளர்ச்சி அடைந்த சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான நிகழ்வுகளும் சங்ககாலத்திலேயே கட்டமைக்கப்பட்டவை. மன்னர்கள் கோலோட்சிய அக்காலம் பல்வேறு சமுதாயக் கோட்பாடுகளை உருவாக்கியிருந்தன. சங்க காலத்தில் கல்வி முதலான கலைகள் எல்லாம் சிறந்து இருந்தன. இனக்குழு நிலையில் இருந்து மீண்டும் மேன்மையான சமுதாயமாக அமைந்திருந்தது. மக்கள் வாழ்வியலில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளை சங்க இலக்கிய பதிவுகள் சுட்டுகின்றன. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பிரிவினர் சமூகத்தின் மேல் தளத்தில் இருந்துள்ளனர். இவர்களைத் தவிர சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த தொழில் பிரிவினர் பலர் இருந்துள்ளனர். “குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும், முல்லை நிலத்தவர் ஆயர் என்றும், மருத நிலத்தவர் உழவர் என்றும், நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும், பாலை நிலத்தவர் எயினர் என்றும் வழங்கப்பட்டனர். இவர்கள் அல்லாமல் தச்சர், கொல்லர், குறவர், வண்ணார், நெசவாளர், உமனர், பறையர், பாணர் சூடியர், கடம்பர், நட்டுவர், கனியர், பரத்தையர் முதலான பல வகுப்பர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர்”[4] உற்று நோக்குகிற போது சங்க காலத்தில் சாதிய பாகுபாடும் வருணப்பிரிவும் கவனிக்கத்தக்க வகையில் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை அறிய முடிகிறது.

நாட்டை ஆளும் தன்மையோர் அரசர் என்றும், நாடு நலம் பெற வேள்வி செய்வார்கள் அந்தணர் என்றும், வியாபாரத் தொழில் செய்பவர்கள் வணிகர் என்றும், விவசாயத் தொழில் செய்பவர்கள் வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். சங்ககால மட்டுமின்றி இன்றளவும் கிராமப்புறங்களிலும் நாட்டுப்புற மக்கள் இடையேயும் தொழில் முறை சாதி பாகுபாடு இருப்பதை அறிய முடிகின்றது.

### செவிலக்கியங்களும் நாட்டுப்புறத் தொழில்களும்

### தச்சுத் தொழில்

மரங்களைக் கொண்டு கைவினைப் பொருள்களைச் செய்பவர்கள் தச்சர்கள் எனப்பட்டனர். பண்டைக் காலத்தில் மன்னர்களுக்குத் தேவையான தேர்தல் முதலானவற்றைச் செய்வதிலும் வீட்டு உபயோகப் பொருட்களைச் செய்வதிலும் இவர்கள் முக்கிய பங்காற்றினர்.

**“வைகல் எண்டேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த காலம் னோனே”** (**புறம்.87**)

மாதம் எட்டு தேர்கள் செய்யும் தச்சன் மாதம் முழுவதும் முயன்று ஒரு தேர்ச் சக்கரத்தைச் செய்து முடித்தான் என்னும் தொழில் திறம் புறநானூற்றுப் பாடலில் புலப்படுகிறது.

**“அகனகர் வியன் முற்றத்துச்**
**..........................................**
**முக்காற் சிறுதேர் முன்று வழி விளங்கும்”**
(**பட்டினம்.20-25**)

**“தசறான் கெய்திய பனைமருள் நோன்றாள்**
**பேரள வெய்திய பெருமபெயர் பாண்டில்”** (**நெடு.115-123**)

சிறுவர்களின் சிறுதேர் குறித்த செய்தியை பட்டினப்பாலையிலும் , நெடுநல்வாடையில் கட்டில் வேலைபாட்டின் சிறப்பும் அதன் பாடல் அடிகளால் அறிய முடிகின்றன. இதே தச்சரை ஆசாரி என்று கூறும் வழக்கு நாட்டுப்புறத்தில் இருக்கின்றது

**“அஞ்சு கிளி ரெண்டெழுதி**

**அம்மா என்னும் பேரெழுதி**
**கொஞ்சு கிளி ரெண்டெழுதி**
**கொண்டு வந்தார் ஆசாரி”**[5]

இதன் மூலம் தச்சுத்தொழில் காலம் காலமாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

### கொல்லத் தொழில்

கொல்லத் தொழில் செய்பவர்கள் மன்னனுக்குரிய போர் கருவிகளைச் செய்து கொடுத்தலே முக்கியக் கடமையாகக் கொண்டனர்.

**“வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே”**

(**புறம்.312**)

என கொல்லர்க்குரிய கடமையைப் புறநானூறு குறிப்பிடுகின்றது. ஆ.தட்சிணாமூர்த்தி சங்க இலக்கியத்தில் கொல்லர்கள் பெறும் இடத்தை “தமிழர்கள் உலோகத் தொழிலில் மிகவும் மேம்பட்டிருந்தனர். இரும்பு செய் கொல்லரும் பொன் செய் கொல்லரும் தனித்தனியே பேசப்படுகின்றனர். போர்கள் நிறைந்த அக்காலத்தில் வாளும், வேலும் பிற போர் கருவிகளும் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டிருப்பர். வெயில் காய்ந்து வெம்மை ஏறிய பாறையினை ‘உலைக்கல்லன்ன பாறை’ என்று புலவர்கள் துன்ப மகளிரின் பெருமூச்சுக்கு பேசினர். ‘ஊதுலைக் குருகினை’ உவமையாக கூறியுள்ளனர். அதியமானின் படைக்கலன்கள் சிதைந்தும் நுனி மழுங்கியும் கொற்றுறைக் குற்றில்லத்தில் இருந்ததாக ஔவையார் பாடுவார்”[6] என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பொற்கொல்லர் பற்றிய செய்தியை “பொன் செய் கன்னம் பொழிய வெள்ளி என்னும் அடிகளால் அறிய முடிகின்றன” இதுபோலவே நாட்டார்

வழக்கிலும் கொல்லறை தட்டான் என்னும் சொல்லால் அழைக்கும் வழக்கம் இருக்கின்றதை அறிய முடிகின்றது.

**“கம்மலுக்கு அரும்பு வெச்சாண்டி**
**ஆச்சாரி அண்ணன், ஆரழகன்**
**வன்னிய தட்டான் வடிவழகன்**
**கம்மலிலேயும் கொஞ்சம், கொஞ்சம்**
**பழுது யிண்ணாண்டி”**[7]

**மண்பாண்டத் தொழில்**

மண் கொண்டு தாழிகளும் இல்லப் பயன்பாடு பொருள்களும் செய்பவர்கள் குயவர் எனப்பட்டனர். கலம் செய் கோ என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர்.

மண்பாண்டம் செய்யும் குயவர்கள் பச்சை மண்ணால் கலங்களைச் செய்து அவற்றை சூளையில் வைத்து சுட்டு பயன்படுத்தினர். வீட்டுக்குப் பயன்படும் பொருள்களைச் செய்யும் தொழில் ஒருபுறம் இருக்க, இறந்தவர்களைப் புதைக்க பெரிய மண்பாண்டங்களும் செய்யப்பட்டன அது முதுமக்கள் தாழி எனப்பட்டது. இதனை,

**“இருள் திணிந்தன்ன குரு உத்திரன் பருவப் புகை**
**அகலிரு விசும்பின் ஊன்றும் சூளை**

(**புறம்.**228)

**“கவி செந்தாழிக் கவிபுறத்து இருந்த**
**செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா”**

(**புறம்.**238)

என்ற பாடல் வரிகள் மண்பாண்டத் தொழிலை உணர்த்துகிறது. மேலும் இக்காலத்திற்குச் சான்றாக கிராமங்களில் காணப்படும் அய்யனார் போன்ற காவல் தெய்வங்களின் சிலைகள் யாவும் மண்பாண்ட கலைஞர்களால் உருவாக்கப்பட்ட களிமண் சிற்பமாகும்.

## நெசவுத் தொழில்

மக்கள் தங்கள் வாழ்க்கையில் கண்டறிந்த அரிய பொருள் ஆடையாகும். தமிழகத்தில் பண்டைக்காலம் முதலே நெசவுத்தொழில் சிறந்து இருந்தமையை சங்க பாடல்கள் வழி அறிய முடிகின்றது. மென்மையான ஆடைகள் நெய்யப்பட்ட வழக்கத்தை அறிய முடிகின்றது.

**“பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ்**
**நிறங்கிளா பூந்துகில் நீர்மையின் உடீஇ** (**சிலம்பு.கடலாடு.**87-88)

**“நோக்கு நுழைகல்லா நுண்மைய உன் கனிந்து**
**அரவுரியன்ன அறுவை நல்கி** (**பொரு.**82-83)

சங்ககாலம் போலவே நெசவுத் தொழிலானது இன்றளவும் பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும் நெசவாளர்களை சோனியர் என்று நாட்டார் வழக்கில் குறிக்கின்றனர்.

## துணிவெளுக்கும் தொழில்

உடைகளை வெளுத்துக் கொடுக்கும் தொழில் செய்பவர்கள் வண்ணார் என்றும் காளியர் என்றும் அழைக்கப்பட்டனர். வண்ணார் இன பெண்கள் புலைத்தி

எனப்பட்டனர். அகநானூறு, நற்றிணை, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்கள் இவர்களின் தொழில் முறையினையும் வாழ்க்கை முறையினையும் எடுத்துக்காட்டுகின்றனர். இவர்கள் தங்கள் வாழ்க்கைக்காகப் பிறரையே சார்ந்து இருந்தனர. வாழ்க்கை ஏழ்மை தழுவியதாக இருந்தது என்பதை பாக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**“பசைவிரல் புலைத்து நெடிது பிசைந்தூட்டிய**
**பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்**

(**அகம்**.38)

**“வறனில் புலைத்தி எல்லித் தோய்த்த**
**புகார்புகர் கொண்ட புண்பூங் கலிங்கமொடு**

(**நற்றி**.90)

**“களர்ப்படு கட்வல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழிய வெள்ளருவை** (**புறம்**.311)

இப்பாடல்கள் உடைகளை வண்ணார்கள் பசையிட்டு காயச் செய்தமையினையும் அவர்களின் வாழ்க்கை வறுமை நிலையாய் இருந்ததையும், ஊற்றுக்கிணறுகள் தோண்டித் துணிகளை வெளுத்தமையையும் எடுத்துக்காட்டுகின்ற. இன்றளவும் பிறப்பு, இறப்பு, பூ பெய்தல் போன்ற சடங்குகளில் வண்ணார்களின் பங்களிப்பைக் காண முடிகிறது.

**நெய்தல் நிலத் தொழில்**

கடலும் கடல் சார்ந்த இடத்தைச் சேர்ந்த அவர்கள் மீன் பிடி தொழிலும் உப்பு விளைவிக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். “பரதவர் காயவிட்ட மீனை விற்பனைக்காக படகுகளில் கொண்டு வந்ததை மதுரைக்காஞ்சி கூறுகின்றது”[8].

இதேபோல் நாட்டுப்புறப் பாடல் ஒன்றில் கடலில் மீன் பிடிக்கும் அசதி தெரியாமல் இருக்க பாடும் பாடல் ஒன்று இடம்பெறுகிறது அதாவது

**"மின்னல் வலை அரிச்சுவடி-ஐலசா**
**பிடிக்கும் மீன்கள் நம் பொருட்கள்-ஐலசா**
**அடிக்கும் அலையே நம் தோழன்-ஐலசா**
**அருமை மேகம் தமது குடை-ஐலசா"**[9]

மீன் பிடிப்பவர்கள் பரதவர்கள் என்று அழைக்கப்படுவதைப் போலவே உப்பு விளைவித்து உப்பளத்தில் பணிபுரிபவர்கள் உமணர் என்றும், உமண மகளிர் மெட்டியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

"உப்புக் காய்ச்சும் தொழில் தமிழ்நாட்டு புராதான தொழில்களில் ஒன்று, இத்தொழில் மிகவும் கடினமானது அளத்தில் நீரில் உரைந்து இருக்கும் உப்பு காலைக் கீரி வேதனையை உண்டாக்கும்"[10] என்று நா.வானமாமலை உப்பளப் பாடல்கள் குறித்து குறிப்பிடுகிறார். புதிதாக உப்பள வேலைக்கு வருபவர்கள் படும் துயரங்களை நாட்டுப்புறப் பாடல் ஒன்று குறிக்கின்றது

**"காரப்பாடு அளத்திலேயும்**
**கழுத்து அளவு தண்ணிலே**
**நீந்தத் தெரியாம நிற்கிறாளே**
**என் தோழி"**[11]

இவ்வாறாக நாட்டுப்புற தொழில் முறைகளும் அவற்றில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகளும் சங்க இலக்கியங்களில் உள்ளது உள்ளவாறே பதிவு செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

செவ்விலக்கியங்கள் உலக நாகரிகத்திற்கு பல விழுமியங்களை வழங்கியிருக்கின்றன. மனித சமுதாயம் பல நாடுகளில் நிலைபெறாக் காலத்திலே மிகப் பெரிய சமுதாயக் கட்டமைப்ப நிலை நாட்டியது பண்டைய தமிழர்களின் சமுதாயமாகும். இன்று இயங்கும் தொழில்கள் பழங்காலத்தில் நில அடிப்படையில் இயங்கியமையை செவ்விலக்கியப் பாடல்கள் நமக்கு எடுத்தியம்புகின்றமையை அறிய முடிகின்றது. தொழில் சார்ந்த சொற்கள் இலக்கியங்களில் இனம் காண முடிகின்றது. பழந்தமிழர்களின் வாழ்வியல் முறைகளின் முதன்மையான தொழில்கள் இன்றளவும் நீடிக்கின்றதையும் அவற்றின் தொன்மையையும் அறிந்து கொள்வது இவ்வாய்வின் பயனாக அமைகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. க்ரியா, தற்காலத் தமிழ் அகராதி, ப.887
2. சி.பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.160
3. கா.சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், ப.2
4. அ.தட்சினாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பன்பாடும், ப.43-44
5. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.100
6. அ.தட்சினாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பன்பாடும், ப.45
7. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.91-99
8. பட்டினப்பாலை, 185-193
9. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.55
10. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.141
11. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.142

**துணைநூற் பட்டியல்**

1. பண்பாட்டு மானிடவியல், பக்தவச்சல பாரதி.சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990

2. சங்க காலச் சமுதாயம், சுப்பிரமணியன்.கா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, 1993.

3. தமிழர் நாகரிகமும் பண்பாடும், தட்சினாமூர்த்தி.அ, யாழ் வெளியீடு, சென்னை, 1994

4. நாட்டுப்புற இயல் ஆய்வு, சக்திவேல்.சு, மணிவாசகர் நூலகம், சென்னை, 1983

5. தமிழர் நாட்டுப் பாடல்கள், வானமாமலை.நா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, 2004.

6. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை, 2009.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Available at: https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/view/85